T3-விவரங்களைக் கையாளுதல்

மாதிரி வினாத்தாள் IX

8th Standard

**கணிதம்**

Reg.No. :

## I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

Time : 01:45:00 Hrs

Total Marks : 40

### பகுதி -அ

5 x 2 = 10

1) பின்வரும் விவரங்களுக்கு ஒரு நிகழ்வெண் பட்டியல் தயார் செய்க:

15, 17, 17, 20, 15, 18, 16, 25, 16, 15,

16, 18, 20, 28, 30, 27, 18, 18, 20, 25,

16, 16, 20, 28, 15, 18, 20, 20, 20, 25.

2) ஒரு தேர்வில் 100 மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்கு நிகழ்வுச் செவ்வகம் வரையவும்.

| **மதிப்பெண்கள்** | 0-10 | 10-20 | 20-30 | 30-40 | 40-50 | 50-60 | 60-70 | 70-80 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **மாணவர்களின் எண்ணிக்கை** | 5 | 10 | 15 | 20 | 25 | 12 | 8 | 5 |

3) கீழே கொடுக்கப்பட்ட பரவலுக்கு ஒரு நிகழ்வுச் செவ்வகம் வரைந்து அதன் மீது ஒரு நிகழ்வுப் பலகோணம் அமைக்கவும்.

| பிரிவு இடைவெளி | 10-20 | 20-30 | 30-40 | 40-50 | 50-60 | 60-70 | 70-80 | 80-90 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்வெண் | 4 | 6 | 8 | 10 | 12 | 14 | 7 | 5 |

4) பள்ளி இறுதிப் பொதுத்தேர்வில் (ளு.ளு.டு.ஊ.) ஒரு பள்ளியின் தேர்வு முடிவுகள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

| தேர்வு முடிவு | முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றோர் | இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றோர் | மூன்றாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றோர் | தேர்ச்சி பெறாதோர் |
|---|---|---|---|---|
| மாணவர்களின் சதவீதம் | 25 | 35 | 30 | 10 |

மேற்கண்ட விவரங்களை விளக்க ஒரு வட்ட விளக்கப்படம் வரைக.

5) பின்வரும் விவரங்களுக்கு எடையிட்ட கூட்டுச் சராசரி காண்க.

| **உணவுப் பொருட்கள்** | **அளவு (கி.கி.)**$w_i$ | **ஒரு கிலோ கிராம் விலை(ரூபாய்)**$w_i$ |
|---|---|---|
| அரிசி | 25 | 30 |
| சர்க்கரை | 12 | 30 |
| எண்ணெய் | 8 | 70 |

### பகுதி -ஆ

10 x 3 = 30

6) கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைப் பயன்படுத்தி ஒரு நிகழ்வுச் செவ்வகம் வரைக

| ஒரு ஏக்கரில் விளைச்சல் (குவிண்டால்) | 11-15 | 16-20 | 21-25 | 26-30 | 31-35 | 36-40 |
|---|---|---|---|---|---|---|
| நெல் வயல்களின் எண்ணிக்கை | 3 | 5 | 18 | 15 | 6 | 4 |

7) ஒரு கிராமத்தில் உள்ள மக்களில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

| வயது (ஆண்டுகளில்) | 10-20 | 20-30 | 30-40 | 40-50 | 50-60 | 60-70 |
|---|---|---|---|---|---|---|
| நோயாளிகளின் எண்ணிக்கை | 3 | 6 | 13 | 20 | 10 | 5 |

மேற்கண்ட விவரங்களுக்கு நிகழ்வுச் செவ்வகத்தைப் பயன்படுத்தி ஒரு நிகழ்வுப் பலகோணம் வரைக

8) கீழ்க்கண்ட விவரங்களுக்கு நிகழ்வுச் செவ்வகத்தைப் பயன்படுத்தி நிகழ்வுப் பலகோணம் அமைக்க.

| **வயது (ஆண்டுகளில்)** | 0-10 | 10-20 | 20-30 | 30-40 | 40-50 | 50-60 | 60-70 |
|---|---|---|---|---|---|---|---|
| **ஆட்களின் எண்ணிக்கை** | 6 | 11 | 25 | 35 | 18 | 12 | 6 |

9) திரு. இராஜன் பாபு தன் வருமானத்தில் 20% ஐ வீட்டு வாடகைக்காகவும், 30ரூ ஐ உணவுக்காகவும், 10% ஐ தன் குழந்தைகளின் கல்விச் செலவுக்காகவும் செலவழிக்கின்றார். 25% ஐச் சேமிக்கின்றார். எஞ்சியதை மற்ற செலவினங்களுக்கா கச் செலவு செய்கிறார். இவற்றை விளக்க ஒரு வட்ட விளக்கப்படம் வரைக.

10) 18, 41, x , 36, 31, 24, 37, 35, 27, 36 இவற்றின் சராசரி 31 எனில் x இன் மதிப்பு என்ன?

11) ஒரு வகுப்பில் உள்ள 20 மாணவர்களின் சராசரி உயரம் 160 செ.மீ எனக் கணக்கிடப்பட்டது. சரிபார்க்கும் போது 152 செ.மீ என்பதை 132 செ.மீ என தவறாக எடுத்துக் கொள்ளப்பட்டதாகத் தெரிய வந்தது. சரியான சராசரி உயரம் காணவும்.

12) பின்வரும் விவரங்களுக்கு முகடு காணவும்.

55, 51, 62, 71, 50, 32.

13) பின்வரும் விவரங்களுக்கு முகடு காணவும்.

24, 20, 27, 32, 20, 28, 20.

14) பின்வரும் நிகழ்வெண் அட்டவணைக்குக் கூட்டுச் சராசரி, இடைநிலை அளவு மற்றும் முகடு காண்க

| **வயது (ஆண்டுகளில்)** | 19 | 21 | 23 | 25 | 27 | 29 | 31 |
|---|---|---|---|---|---|---|---|
| **ஆள்களின் எண்ணிக்கை** | 13 | 15 | 20 | 18 | 16 | 17 | 13 |

இவற்றின் கூட்டுச் சராசரி, இடைநிலை மற்றும் முகடு காண்க.

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in

15) பின்வரும் மதிப்புகளுக்கு இடைநிலை காண்க.

70, 71, 70, 68, 67, 69, 70.

*****************************************